Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

5 மதிப்பெண் வினாக்கள்

1. (i) ஆள்சார் தடை
(ii) இடத்தடை
(iii) காலத்தடை
(iv) இடர் மற்றும் பொருட்கள் தரம் கெடாமல் இருக்க தடை
(v) நட்ட இடர்பாட்டு தடை
(vi) அறிசார் தடை
(vii) பண்டப் பரிமாற்றத் தடை
(viii) நிதித் தடை
(ix) பொருட்களைத் துல்லியமாக தயாரிப்பத்தில் தடை
(x) பொருட்களை உற்பத்தி செய்கின்ற இடத்திலிருந்து நுகர்வோருக்கு நேரடி வீட்டிற்கு கொண்டு செல்லுதல்.
2. (i) ஒவ்வொருவரும் தேவைக்கு அதிகமாகப் பொருட்களை இருப்பில்வைத்திருக்கவேண்டும்.
(ii) இருவருக்கும் அப்பொருட்கள் உரிமை மாற்றுத் தேவையாக இருக்க வேண்டும்.
(iii) பரிமாற்றத்தின் போது இருவருக்கும் நேரடித் தொடர்பு முக்கியமாகக் கருதப்படும்.
3. (i) அரசியல் மாற்றங்கள் இருந்த போதும் 12-ஆம் நூற்றாண்டு முதல் 16-ஆம் நூற்றாண்டு வரை இந்தியா செழிப்புடன் விளங்கியது. பால்பன் முதன் முதலாக சுல்தானாக இருந்தார். அடர்ந்த வனப்பகுதிகளில் பாதை உருவாக்கி வியாபாரம் செய்ய வழி வகுத்தார்.
(ii) அலாவுதின் கில்ஜி பொருட்களின் விலைகளைக் குறைத்து வியாபார வளர்ச்சியை பெருக்க வழி வகுத்தார்.
(iii) அவர் பெர்சியாவிலிருந்து வெளிநாட்டுப் பொருட்களை இறக்குமதி செய்ய மானியம் வழங்கி ஊக்கப்படுத்தினார். அரேபியர்கள் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்தினார்.
(iv) தமிழர்கள் குஜராத்தியர்கள் போன்ற இந்திய வர்த்தகர்கள் அவர்களைஒருபோதும் நசுக்க நினைத்ததில்லை. கடலோர வர்த்தகம் மார்வாடிகள் மற்றும் குஜராத்தியர்கள் கைகளில் இருந்தன. மத்திய மற்றும் மேற்கு ஆசிய நிலப்பகுதி வர்த்தகம் இந்துக்களில் முல்கானியர்களிடமும் ஆப்கானியர் மற்றும் ஈரானியர்களில் குர்சானியர்களிடமும் இருந்தது.
(v) வெள்ளி மற்றும் தாமிரம் அடிப்படையில் நாணயமுறை நிறுவப்பட்டு, சுல்தான் காலகட்டத்துக்குள் வர்த்தகம் செழித்தோங்கியது.
4. (i) பூம்புகார் போன்ற பெரிய நகரங்கள் மருவூர்பாக்கம் (உள் நாட்டு நகரம்) மற்றும் பட்டினம்பாக்கம் (கடலோர நகரம்) ஆகியவை உணவுப்பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் பெரு வியாபாரிகளையும் கொண்டிருந்தன.
(ii) தொண்டி, கொற்கை பூம்புகார் மற்றும் முசிறி ஆகிய துறைமுகங்கள் ஒட்டிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் இடங்களாக இருந்தன. வெளிநாட்டு வர்த்தகம் சிறப்பிடம் பெற்றிருந்தன. முத்துக்கள், பவளங்கள் மீன் பிடிப்பதிலும், உப்பு உற்பத்தியிலும் கப்பல் கட்டுதலிலும் ஈடுபட்டிருந்தனர்.
(iii) குறிப்பாக சிறியதான படகு திமிலா, தோணி, அம்பு ஓடம், புனை, கட்டுமரம் முதலியன உள்நாட்டு வியாபாரத்திற்கும், பேரளவுகலம், மரக்கலம், வங்கம், நாவாய் முதலியன வெளிநாட்டு வியாபாரத்திற்கும் பயன்படுத்தினர்.
5. (i) ரோமாபுரி மற்றும் கிரேக்க வர்த்தகர்கள் பழங்காலத் தமிழ்நாட்டுக்கு வந்து பண்டைய சோழ, சேர, பாண்டிய மன்னர்களைச் சந்தித்து வணிகத் தொடர்புகளை ஏற்படுத்தினார்.
(ii) சீன சோங் வம்சத்தினர் சோழர்களுடன் வலுவான வர்த்தக உறவு கொண்டிருந்தனர். இந்தோனேசியா மற்றும் மலேசியாவை ஆண்டு கொண்டிருந்த ஸ்ரீ விஜய நகர சாம்ராஜ்ஜியத்தை, சோழர்கள் கைப்பற்றி, சீனாவுடன் கடலோர வணிகத்தைத் தொடர்ந்தனர்.
(iii) இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சீனத்தின் யுவான் சுவாங் என்பவர் கண்டறிந்து தனது தேசத்திற்கு எடுத்துரைத்துள்ளார். 16 மற்றும் 18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நிறுவனங்களுடன் வர்த்தகம் செய்ததன் காரணமாக இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகம் பரவலாக விரிவடைந்தது.
(iv) வாஸ்கோடகாமா ஐரோப்பாவிலிருந்து நன்னம்பிக்கை முனை வழியாக கி.பி. 1496 - இல் இந்தியாவுக்கு வரும்போது அனைத்துப்புதிய கடல் வழிகளையும் கண்டுபிடித்ததால் நாகரிக உலகத்தில் பெரும் தாக்கம் ஏற்பட்டது. மேலும் போர்த்து கீசியர்களின் இந்திய வருகை பிற ஐரோப்பிய சமூகங்களின் வருகைக்கு வழிவகுத்தது. இவ்வாறாக இந்தியாவின் கடலோர வர்த்தகம் ஐரோப்பியர்கள் மீது ஏகபோக உரிமை கொண்டதாக மாறியது.
(v) ஒரு கட்டத்தில் 17-ஆம் நூற்றாண்டு வரை இந்தியாவின் உலகளாவிய வர்த்தக பங்கு 55-விழுக்காடாக இருந்தது. 21-ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் உலகளாவிய வர்த்தக பங்கு 2 விழுக்காடாக தற்போது குறைந்து விட்ட நிலையில் இந்தியாவுக்கு வந்த ஐரோப்பிய வர்த்தகர்கள் படிப்படியாக பிரித்தாளும் சூழ்ச்சியின் மூலம் பல அரசர்களை பல்வேறு பகுதிகளில் வீழ்த்தினர்.
(vi) ஐரோப்பிய வர்த்தகத்தின் விளைவாக 17 மற்றும் 18-ஆம் நூற்றாண்டுகளில் துணி மற்றும் கப்பல் கட்டுதல் பாரதத்தின் புகழ் பெற்றது. ஆங்கிலேயர்கள் படிப்படியாக இந்திய பிராந்தியங்களில் இளவரசர்களின் கட்டளைகளை அகற்றினர். இதனால் பிரிட்டிஷ் ஆட்சியில் இந்திய பொருட்களின் விலை குறைந்தது. குறிப்பாக இந்திய ஜவுளிப் பொருட்கள், கைவினைப் பொருட்கள் போன்ற பாரம்பரிய பொருட்களின் ஏற்றுமதிக்கு தடைகளை விதித்தார்கள். 1600 தொடக்கம் முதல் 19-ஆம் நூற்றாண்டின் முற்தொடக்கம் முதல் 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்கிடையில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஆசியா முழுவதும் தங்களின் வர்த்தகத்தை விரிவாக்கம் செய்தது.

6. பண்டங்கள் மற்றும் பணிகள் பரிமாற்றத்தினூடே ஏற்படும் தடைகளும் இடையூறுகளும் அவற்றை நீக்கும் வழி வகைகளும் பின் வருமாறு :-
1. ஆள்சார் தடை
பொருள்கள் தேவைப்படும் நபர்களையும் நியாயமான விலையில் வாங்க விரும்புபவர்களையும் தொடர்பு கொள்ள முடியாத நிலை உள்ளது. உற்பத்தியாளரும் நுகர்வோரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பே கிடையாது. இக்குறைபாடே ஆள்சார் தடை எனப்படும். உற்பத்தியின் அளவு அதிகரிக்க நுகர்வோரை நாடிச் செல்ல வேண்டியுள்ளது. வணிகத்தின் முக்கிய அங்கமாகத் திகழும் வியாபாரம் இக்குறைபாட்டை நீக்க உதவுகிறது.
2. இடத் தடை
பொருட்கள் ஒரு இடத்தில் உற்பத்தி செய்யப்பட்டு நாடு முழுவதும் மற்றும் உலகம் முழுவதும் உள்ள நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ரயில், விமானம், கடல் மற்றும் நில போக்குவரத்து போன்றவை நுகர்வோர்களுக்கு பொருட்களை கொண்டு

செல்லமுக்கிய போக்குவரத்தாக இருக்கிறது.

3. காலத் தடை

நுகர்வுத் தேவைப்படும் பொழுதும் வாங்கவிரும்பும் பொழுதும் பொருட்கள் கிடைக்க வேண்டும். தேவையைக் கணக்கில் கொண்டு பேரளவு உற்பத்தி செய்யப்படுவதும் நுகர்வோரிடம் விற்கத் தயார் நிலையில் வைத்திருக்கவேண்டும். ஒரு குறிப்பிட்டகாலத்தில் மட்டும் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள்ஆண்டு முழுவதும் தேவைஏற்படும். எனவே பொருட்களைப் பண்டகக் காப்பகங்களில் சேகரித்துக் வைத்துக் கொள்வதன் மூலம் நுகா; பொருள் தொடர்ந்து கிடைக்கவழி ஏற்படும்.

4. இடர் மற்றும் பொருட்கள் தரம் கெடாமல் இருக்கத் தடை: பொருட்கள்முறையானசிப்பம் கட்டுதல் மற்றும் நவீனகுளிர்சாதனவசதி கொண்டபண்டகசாலைகள்ஆகியவற்றால் பொருட்களின் தரம் குறையாமல் பாதுகாக்கப்படுகிறது. பொருட்கள்பூச்சிகள், எலிகள், ஆவியாதல் போன்றவைகளுக்கு எதிராக பாதுகாக்கப்படுகின்றன.

5. இடர்பாட்டுத் தடை

போக்குவரத்துக் கட்டுமம் உள்ளிட்டவைகள் மூலம் சரக்குகள் கொண்டு சென்றாலும், ஆட்களாலும், இயற்கையாலும் ஏற்படக்கூடிய நட்டங்களைத் தவிர்க்கமுடிவதில்லை, இந்நட்டத்தைஈடுகட்டக் காப்பீடு செய்யப்படுகிறது. தீக்காப்பீடு, கடல்சார் காப்பீடு மற்றும் பொதுக்காப்பீடு ஆகியவற்றின் வழியாக நட்டத்தைப் சரிக்கட்டமுடியும்.

6. அறிவுசார் தடை

சந்தை நிலவரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாததால் நுகர்வோர் தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்க இயலாமல் போய் விடக்கூடும். இத்தடைக்கு அறிவுசார் தடை என்கிறோம். நல்ல விளம்பரம் மற்றும் விற்பனையாளர் சேவைகள் மூலம் அத்தடையை நீக்கலாம்.

7. பண்டப் பரிமாற்றத் தடை

பணம் பண்டப் பரிமாற்றத்தில் முக்கிய பங்கு வகுக்கிறது. பொருட்களுக்கு உண்டான சரியான விலையை செலுத்துவதன் மூலம் எந்தவொரு தயாரிப்பு அல்லது சேவையையும் வாங்குதல் மற்றும் விற்பது ஆகியவற்றை செயல்படுத்துகிறது.

8. நிதித் தடை

உற்பத்தியாளர்களும் வர்த்தகர்களும் அவசியமான நேரத்தில் தேவையான நிதி கிடைப்பதில்லை. வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் நிதியை வணிக ரீதியாக செயல்படுத்துவதற்கும் பரிமாறிக்கொள்வதற்கும் நிதி உதவுகிறது.

9.பொருட்களைத் துல்லியமாக தயாரிப்பதில் தடை: ஆராய்ச்சிகளின் மூலம் நுகர்வோரின் தேவையை அறிந்து அவர்களுக்கு தரமான பொருட்களை வழங்க முடிகிறது.

10.பொருட்களை உற்பத்தி செய்கின்ற இடத்திலிருந்து நுகர்வோருக்கு நேரடி வீட்டிற்கு கொண்டு செல்லுதல் மின்னணு வணிகம் மூலம் பொருட்களை வீட்டிலிருந்தே வாங்கல் ஆணை பிறப்பிக்கலாம். பொருட்களை பெற்றுக்கொண்ட பின் அதற்குண்டான தொகையினை செலுத்தலாம்.

3 மதிப்பெண் வினாக்கள்

7. பண்டங்கள் மற்றும் பணிகள் பரிமாற்றம் செய்யும் ஓர் ஒழுங்கு முறை அமைப்பு வணிகம் என்றழைக்கப்படுகிறது.
8. மருவூர்பாக்கம்:
   (i) பூம்புகார் போன்ற பெரிய நகரங்கள் மருவூர்பாக்கம் (உள்நாட்டு நகரம்) என அழைக்கப்பட்டன. உணவுப் பொருள்கள் மற்றும் இதரபொருள்கள் வியாபாரம் செய்யக் கூடிய இடங்களில், அங்காடிகளையும் பெரும் வியாபாரிகளையும் கொண்டிருந்தன.
   (ii) எ.கா. : தொண்டி, கொற்கை, பூம்புகார், முசிறி ஆகும்.
   பட்டினப்பாக்கம்:
   (i) பட்டினப்பாக்கம் என்பது கடலோர நகரம் ஆகும்.
   (ii) எ.கா. முத்துக்கள், பவளங்கள், மீன் பிடிப்பதிலும், உப்பு உற்பத்தியிலும் இடம் பெற்றுள்ளன.
9. சங்க காலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கிடையே அடர்ந்த காட்டுப் பகுதியில் சாலைகள் அமைத்து தரப்பட்டன. பெருவழி எனப்படும் தரை வழி நெடுஞ்சாலைகளும் அமைக்கப்பட்டிருந்தன.
10. பாண்டியர் ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் கொற்கை, சாலியூர், காயல்பட்டினம், மருங்காவூர்பட்டினம், குமரி ஆகிய இடங்கள் ஆகும்.
11. உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் யாவும் அரசு குறிப்பிடும் ஓர் இடத்தில் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. வணிகர்கள் மட்டுமே கட்டுப்பாட்டு அலுவலரால் நிர்ணயிக்கப்பட்டு செல்வ வளம் உருவாக்கப்பட்டது.
12. பல பொருள்கள் விற்குமிடம் அங்காடி என அழைக்கப்பட்டுள்ளது.
    பகலில் நடப்பதை நாளங்காடி எனவும்
    இரவில் நடப்பதை அல்லங்காடி எனவும் குறிப்பிடுகிறார்.
    அவர் மேலும் மதுரை ஒரு இரு பெரு நியாமத் எனப்படும் தூங்காநகரம் எனக் குறிப்பிடுகிறார்.
    அதாவது இடைவெளியின்றி 24 மணி நேரமும் வியாபாரம் நடந்ததாகக் கூறுகிறார்.
13. வணிக நடவடிக்கைகள் பண்டைய காலத்துப் பண்டமாற்று முறையிலிருந்து நாணயமுறை, அஞ்சல் வழி வணிகம், வாடகைக் கடன் கொள்முதல் முறை, தவணை விற்பனை முறை போன்ற பன்முகத் தன்மையில் உருமாறி வளர்ந்துள்ளது.
14. தங்கம், எண்ணெய், கலப்பை, துணி ஆகியவை வியாபாரம் செய்யப்பட்டதாக அழகர்மலை, புகளர், மாங்குளம் மற்றும் இலங்கை ஆகிய இடங்களில் காணப்படும் தமிழ்- பிராமி கல்வெட்டுகள் விளக்குகின்றன.
15. உற்பத்தியாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் அவசியமான நேரத்தில் தேவையான நிதி கிடைப்பதில்லை. வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் நிதியை வணிக ரீதியாக செயல்படுத்துவதற்கும் பரிமாறிக்கொள்வதற்கும் நிதி உதவுகிறது.
16. (i) ராமநாதபுரம்
    (ii) பொடுக்கி (அரிக்கமேடு - பாண்டிசேரி)
    (iii) நாகப்பட்டினம் (நிகம்)
    (iv) காயல்பட்டினம்
    (v) காவேரி பூம்பட்டினம் (கெபிரிஸ்)
    (vi) மரக்காணம் (சோப்டானா)
    (vii) பெரிய பட்டினம்
    (viii) கன்னியாகுமரி (கோமாரி)

2 மதிப்பெண் வினாக்கள்

17. ஒரு பொருள் மற்றொரு பொருளுக்கு மாற்றாகப் பரிமாற்றம் செய்யப்படும் முறையைப் பண்டமாற்று முறை எனலாம்.
18. பகலில் வியாபாரம் நடைபெறுவதை நாளங்காடி என அழைக்கப்படுகிறது.

QB365 Study Material
QUESTION BANK 365

19. இரவில் வியாபாரம் நடைபெறுவதை அல்லங்காடி என அழைக்கப்படுகிறது.
20. தமிழர்களுடன் வர்த்தகம் செய்த அரேபியர்கள் ஜானகர் என்று அழைக்கப்பட்டனர்.
21. தாமிரம், துணி, உப்பு, பூக்கள், சந்தனம், மீன், நெல், தானியங்கள், முத்துக்கள்
22. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மதுராந்தகம் தெற்கே 20 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. முக்கியத்துவம்: இது வர்த்தகத்திற்குரிய ஒரு வளமான இடமாக இருந்தது.
23. புறநானூறு மற்றும் திருக்குறள்

QB 365 Study Material
QUESTION BANK 365